செ.வெ.எண்: 369 நாள்: 22.5.2020

**காவிரி, வைகை, குண்டாறு இணைப்பு திட்டப் பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

---

மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் காவிரி-வைகை-குண்டாறு இணைப்பு திட்ட பணிகளை மேற்கொள்வதற்கென புதிதாக பொறுப்பேற்றுள்ள வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரம்யாதேவி அவர்கள் முன்னிலையில் இன்று (22.5.2020) புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் தொடர்புடைய அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத்திட்ட பணியினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக நில கையெடுப்பு பணியினை மேற்கொள்வதற்காக புதிதாக வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரம்யாதேவி அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும் இவர்களுக்கு கீழ் 3 அலகுகள் அமைக்கப்பட்டு 3 வட்டாட்சியர்கள் தலைமையில் மாவட்டத்தில் இப்பணிக்கு 656.36 ஹெக்டேர் நிலங்கள் கையகப்படுத்தும் வகையில் பணிகளை துரிதப்படுத்திட இன்றையதினம் இக்கூட்டம் நடத்தப்படுகிறது.

இக்கூட்டத்தில் விராலிமலை, குளத்தூர், புதுக்கோட்டை ஆகிய 3 வட்டங்களில் நில கையெடுப்பு பணியினை மேற்கொள்ளும் வகையில் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரம்), நிலஅளவைத்துறை, வருவாய் கோட்டாட்சியர்கள், வட்டாட்சியர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள்

ஒருங்கிணைந்து இப்பணியினை மேற்கொள்கின்றனர். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.காளிதாசன், பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரம்) உதவிப்பொறியாளர் உமாசங்கர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**